மணப்பாறையில் தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் கலைக்கல்லூரி அமைக்கும் திட்டம்.

*வினா எண். 731—திரு. மே. அ. இராஜ்குமார்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மணப்பாறையில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியும், கலைக் கல்லூரியும் அமைக்க அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மணப்பாறையில் தொழில் நுட்பக் கல்லூரியோ, பயிலகமோ ஆரம்பிக்க கருத்துரு ஏதும் இல்லை. ஆனால், கலைக்கல்லூரி ஆரம்பிக்க கோரிக்கை ஒன்று பெறப்பட்டது.

(ஆ) புதிய கலைக்கல்லூரிகள் தற்சமயம் தொடங்கப்பட வேண்டாம் என்ற மைய அரசு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் கருத்தினை ஏற்று இவ்வரசு அத்தகைய செயற் குறிப்புகளைத் தள்ளிப்போட்டுள்ளது.

[முற்பகல் 9.10]

திரு. மே. அ. இராஜ்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை மற்றும் சுற்றுப்புறத்திலேயுள்ள மாணவர்கள் ஏறத்தாழ 50 மைல் சென்று கல்லூரியில் படிக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் இந்த அரசு மணப்பாறையில் கல்லூரி ஒன்று அமைக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் புதிய கல்லூரியைத் துவங்குவது என்ற முடிவை எடுப்போமானால் அப்பொழுது மணப்பாறையைப்பற்றி அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

திருமண தாவாக்கள், கற்பழிப்பு வழக்குகளை விசாரிக்க பெண் நீதிபதிகள்.

*வினா எண் 732— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருமண தாவாக்கள் கற்பழிப்பு வழக்குகள் போன்ற சில ரக வழக்குகளை விசாரிக்க பெண் நீதிபதிகளை நியமிப்பது பற்றி பரிசீலிக்குமாறு மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?